**தேதி :** 09.07.2026 **SC.No. :** 513/2021 PW **:14** நீத்து சாபு

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை தொடர்ச்சி :**

எங்களது வங்கி கணக்கில் ரமேஷ், த/பெ.வேம்பு என்பவர் வங்கி கணக்கு எண்.3656101008707 தொடங்குவதற்கான புகைப்படத்துடன் கூடிய விண்ணப்பம் – அ.சா.ஆ.20 ஆகும். ரமேஷின் மாதிரி கையொப்பம் புகைப்படத்துடன் கூடியது – அ.சா.ஆ.21 ஆகும்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

2 வது ரமேஷ் என்பவருக்கு எங்களது வங்கியில் எந்தவிதமான கணக்கும் இல்லை என்றால் சரியல்ல. அவர் எங்கள் வங்கியில் 39.9 கிராம் எடையுடைய நகையை அடகு வைத்து, தங்க நகைக்கடன் எதுவும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. அது சம்பந்தமாக எந்தவித ஆவணங்களிலும் 2 வது எதிரி ரமேஷ் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. நகையை திருப்புவதற்கு 2 வது எதிரி ரமேஷ் எந்த கடிதமும் கொடுக்கவில்லை என்றாலும், அதிலுள்ள கையெழுத்து அவருடையது இல்லை என்றால் சரியல்ல.

(சாட்சிக்கு தமிழ் சிறிதளவு பேசுவதற்கும், புரிந்து கொள்வதற்கும் தெரியும் என்றும், வாசிக்க தெரியாது என்றும் கூறியதினால் அவருக்கு என்னால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு கூறி அவர் ஆங்கிலத்தில் கூறியதை தமிழில் மொழிபெயர்த்து பதிவு செய்யப்பட்டது.)

**<u>மறுவிசாரணை</u> –**

**இல்லை.**

J
CHRISTAL
BABITHA

Digitally
signed by J
CHRISTAL
BABITHA
Date:
2026.07.10
12:01:10
+0530